Reg. No. : ......................................

Name : ..........................................

**FY-12**

**FIRST YEAR HIGHER SECONDARY EXAMINATION, JUNE 2022**

Part – II

**TAMIL**

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool-off time : 15 Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

**1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்குள் எவையேனும் எட்டனுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். மதிப்பெண் 1 வீதம்**

**(8 × 1 = 8)**

1. 'Feminism' என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம்.

   (அ) பெண்ணியம் (ஆ) தலித்தியம்

   (இ) புனைவியல் (ஈ) இலக்கியவியல்

2. கனகசுப்புரத்தினம் என்ற இயற்பெயர் கொண்டவர்

   (அ) பாரதியார் (ஆ) கவிமணி

   (இ) பாரதிதாசன் (ஈ) நாமக்கல் கவிஞர்

3. 'பொறை' –எனப்படுவது

   (அ) அலர்ந்தவர்க்கு உதவுதல் (ஆ) போற்றாரைப் பொறுத்தல்

   (இ) புணர்ந்தாரை பிரியாமை (ஈ) தண்கிளை செறாமை

4. ‘பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும்’ எனப்பாடியவர்.

(அ) படிக்காசுப்புலவர்

(ஆ) பாரதியார்

(இ) காரைக்கால் அம்மையார்

(ஈ) புகழேந்திப்புலவர்

5. இந்திரவிழா எத்தனை நாட்கள் நடைபெற்றது.

(அ) 38 நாட்கள் (ஆ) 28 நாட்கள்

(இ) 16 நாட்கள் (ஈ) 32 நாட்கள்

6. ஒரு பெயரைச் சிறப்பிக்கவரும் சொல்

(அ) வினையடை (ஆ) பெயரடை

(இ) வினைஎச்சம் (ஈ) பெயர்எச்சம்

7. ‘படிக்காத இதிகாசங்களும் எழுதிமுடிக்காத சரித்திரங்களும் இதன் கரையில்’ எனும் வரிகள் இடம் பெறும் நூல்.

(அ) புணலும் மணலும் (ஆ) ஒரு கிராமத்து நதி

(இ) மூன்றாம் உலகப்போர் (ஈ) நிலவே

8. மூன்று காலங்களையும் காட்டிவரும் தொகை யாது?

(அ) பண்புத்தொகை (ஆ) வினைத்தொகை

(இ) வேற்றுமைத்தொகை (ஈ) அன்மொழித்தொகை

9. கடையெழு வள்ளல்களுள் பறம்புமலைத் தலைவன் என்று சிறப்பிக்கப்படுபவன்

(அ) ஓரி (ஆ) பாரி

(இ) காரி (ஈ) அதியமான்

10. ‘போர்க்குறிக் காயமே புகழின் காயம் யார்க்கது வாய்க்கும் ஆ! ஆ! நோக்குமின் – இக் கூற்று யாருடையது?

(அ) நகுலன் (ஆ) குடிலன்

(இ) ஜீவகன் (ஈ) பலதேவன்

**11 முதல் 18 வரையுள்ள வினாக்களுக்குள் எவையேனும் ஆறனுக்கு இரண்டு வாக்கியங்களில் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 2 வீதம்**

**(6 × 2 = 12)**

11. நவீனத்துவம் முன்வைக்கும் கருத்துக்கள் இரண்டினை எழுதுங்கள்.

12. தமிழகத்தில் வழங்கப்படும் இரண்டு நிகழ்த்துகலைகளின் பெயர்களை எடுத்து எழுதுங்கள்.

(படையணி, வில்லுப்பாட்டு, ஒயிலாட்டம், தெய்யம்)

13. கல்+சிலை என்ற சொல் ஒன்றோடொன்று புணரும் போது ஏற்படும் மாற்றத்தையும் புணர்ச்சி விதியையும் குறிப்பிடுங்கள்.

14. தெருக்கூத்தின் இருவகைப் பாணிகளை குறிப்பிடுங்கள்.

15. சி.வை. தாமோதரம்பிள்ளையின் இலக்கண பதிப்பு நூல்களை தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.

(கலித்தொகை, தொல்காப்பியம், சூளாமணி, வீரசோழியம், தணிகைப்புராணம்)

16. நதிகள் மாசடைதலுக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுங்கள்.

17. ‘கால்காவிலிருந்து சிம்லாவு’க்கு நல்ல அருமையான ரோடு அமைத்திருக்கிறார்கள். நான்கு பேர் ஏறக்கூடிய சௌகரியமான வாடகை மோட்டார்கள் ஓடுகின்றன.

-இப்பகுதியிலுள்ள பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுங்கள்.

18. ‘பெண்ணியம்’ சிறுகுறிப்பு எழுதுங்கள்.

**19 முதல் 25 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 5 வினாக்களுக்கு அரைப்பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 4 வீதம்**

**(5 × 4 = 20)**

19. தரப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படுத்தி பொருள் எழுதுங்கள்.
பரிச்சயம், பிணி, ஞாயிறு, சுவாரஷ்யம்.

20. நிலச்சரிவு ஏற்படுவதற்கான காரணங்களையும் அவற்றைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளையும் எடுத்துரைக்கும் வண்ணம் துண்டுப் பிரசுரம் தயார் செய்யுங்கள்.

21. ‘ஒயிலாட்டம்’ என்ற கலையின் சிறப்புக்களை விளக்கக் குறிப்பாக எழுதுங்கள்.

22. தூய தமிழில் எழுதுங்கள்.

“இந்த எலிகள் தொந்திரவு பெரிசாப் போச்சு! நேற்று ராத்திரி என் துணியெல்லாங்கிழிச்சூட்டுதுங்க! இப்பவும் உக்கிராண அறையில் இரண்டு மூன்று சேர்ந்து கொண்டு காபுரா பண்ணிக் கொண்டிருக்குதுங்கள்! அந்த பூனையே நீங்க கொடுத்தூட்டது தப்புங்க. அது இருந்தா இந்த எலிங்கல்லாம் கிட்ட நாடாதுங்க”.

23. பள்ளி ஆண்டு விழாவில் சொற்பொழிவாற்றுவதற்காக 'கடல்மாசுக்களும் உயிரனச் சிதைவும்' என்ற தலைப்பில் உரைக்குறிப்பு தயார் செய்யுங்கள்.

24. 'மருமக்கள் வழி மான்மியம்' என்னும் கவிதையில் கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் கூறும் சமூகப் பிரச்சனைகளை இன்றைய நிலையோடு ஒப்பீடு செய்து ஒப்பீட்டுக்குறிப்பு எழுதுங்கள்.

25. உலக நதிகள் தினைத்தையொட்டி உங்கள் பள்ளிக்கு வருகை தந்து, "நதிகள் இந்த பூமியின் உயிர்நாடி" என்ற தலைப்பில் உரையாற்றவிருக்கும் சிற்பி பாலசுப்பிரமணியம் அவருக்கு பாராட்டுரை தயார் செய்யுங்கள்.

**26 முதல் 32 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 4 வினாக்களுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 6 வீதம். (4 × 6 = 24)**

26. 'இலக்கியத்தில் சுவைகள்' என்ற தலைப்பில் பள்ளி ஆண்டு மலரில் வெளியிட சிறுகட்டுரை தயார் செய்யுங்கள்.

27. கீழேக் கொடுக்கப்பட்டுள்ள பாடலை நயம் பாரட்டி எழுதுங்கள்.

"ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே"

குறிப்புகள் (சொல்நயம், பொருள்நயம், உவமைநயம்)

28. 'கூத்துக் கலையின் மேன்மை' எனும் தலைப்பில் சிறப்புறையாற்ற உங்கள் பள்ளி கலைவிழாவில் வருகைத் தரவிருக்கும் கூத்துக் கலைஞர் – ஒருவரிடம் நேர்காணல் நடத்த ஆறுவினாக்கள் கொண்ட வினாநிரல் தயார் செய்யுங்கள்.

29. சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களின் தமிழ்ப்பணி குறித்து சிறுகட்டுரை எழுதுங்கள்.

30. போலி மருத்துவ விளம்பரங்களால் இன்றும் மக்கள் பல்வேறு வகைகளில் ஏமாற்றப் படுகின்றனர். 'போலி மருத்துவத்தின் தீயவிளைவுகள்' எனும் தலைப்பில் வானொலி உரை தயார் செய்யுங்கள்.

31. 'படையணி' நிகழ்த்து கலையின் சிறப்பினை எடுத்துக் கூறி உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுங்கள்.

32. "அலைக்கழிக்கும் ரசாயணக் கலவைகள் கலங்க வைக்கும் கழிவுநீர் சாக்கடைகள் நெஞ்சை நடுக்கிடும் ஞெகிழிக் குப்பைகள் மூச்சை இறுக்கும் மாமிசக் கழிவுகளாம்"

(இயற்கை ஓங்கும் சீற்றங்கள்)

இப்பாடல் வரிகளுக்கு விமர்சனக் குறிப்பு எழுதுங்கள்.

**33 முதல் 35 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 2 வினாக்களுக்கு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 8 வீதம்**

**(2 × 8 = 16)**

33. 'மண்மொழி' சிறுகதையைக் கீழேக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் திறனாய்வு செய்யுங்கள்.

குறிப்புகள் :

. கதைக்கரு

. கதைப்பின்னணி

. கதாப்பாத்திரம்

. மொழிநடை

34. ‘கலையே பண்பாட்டின் அடையாளம்’ எனும் தலைப்பில் நடைபெறும் இலக்கிய கருத்தரங்கில் படித்திட “கேரளக் கலைகளும் தமிழக் கலைகளும்” என்ற தலைப்பில் கருத்தரங்க கட்டுரை எழுதுங்கள்.

குறிப்புகள் :

. தெய்யம், படையணி

. ஒயிலாட்டம், வில்லுப்பாட்டு

. தெருக்கூத்து

35. “தமிழ் இலக்கியங்களில் இயற்கைப் பாதுகாப்புச் சிந்தனைகள் “எனும் தலைப்பில் சிறப்புக் கட்டுரை எழுதுங்கள்.

குறிப்புகள் :

- இயற்கையை உவமையில் பயன்படுத்துவது
- இயற்கையைப் பயன்படுத்தி குறிப்பாகக் கருத்தை தெரிவிப்பது
- மானிட வாழ்வுடன் இணைத்தல்
- இயற்கை காட்சி
- அரிய நீதிகளையும் பெரிய உண்மைகளையும் அறிதல்